

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், கூட்டுறவுத்துறையின் சார்பில், பயனாளிகளுக்கு நகைக்கடன் தள்ளுபடி சான்றிதழ் மற்றும் நகைகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 25.11.2023 அன்று வழங்கினார். உடன் திருவரங்குளம் ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, அறந்தாங்கி சரக துணைப் பதிவாளர் ஆறுமுகப்பெருமாள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



சேலம் மாவட்டம் பெத்தநாய்க்கன் பாளையத்தில் தி.மு.க. இளைஞரணி 2வது மாநில மாநாடு நடைபெறுவதையொட்டி மாநாட்டின் பந்தல் அமைக்கும் பணியை நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என். நேரு நேரில் பார்வையிட்டு துரிதமாக பணியை முடிக்க உத்தரவிட்டார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர்கள். இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ சேலம் மத்திய மாவட்டம் டி.எம்.செல்வகணபதி, சேலம் மேற்கு மாவட்டம் க.சுரேஷ் குமார். மாவட்ட துணைச்செயலாளர் (சேலம் கிழக்கு) உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.

### “அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே நண்பனே”!

# வேலூரில் கலைஞர் நூற்றாண்டு விழா புகைப்படக் கண்காட்சி!

## கலைஞர் குறித்து கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் உருக்கம்!

வேலூர், நவ. 28-

கலைஞர் நூற்றாண்டு விழா வையொட்டி, வேலூர் டவுன் ஹாலில் 3 நாட்கள் நடைபெறும் கலைஞர் சிறப்பு புகைப்படக் கண்காட்சியை கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் நேற்று முன்தினம் துவக்கி வைத்தார்.

அமைச்சர்கள் சு.முத்துசாமி. அர.சக்கரபாணி, அரசின் கூடுதல் தலைமைச்செயலர் சந்தீப் சக்சேனா, கூடுதல் செயலர் மலர்விழி, கலெக்டர் குமாரவேல் பாண்டியன், கதிர் ஆனந்த் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், கார்த்திகேயன், அமுலு, மாவட்ட ஊராட்சித் தலைவர் பாபு. மேயர் சுஜாதா, துணை மேயர் சுனில் குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கண்காட்சியில் கலைஞர் ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றப் பட்ட திட்டங்கள், சாதனைகள், அவற்றால் மக்கள் பெற்ற பயன்கள், இளமைக் காலம் முதல் அவர் மேற்கொண்ட அரசியல் பயணம், பல்வேறு அரசியல் மற்றும் முக்கிய தலைவர்களுடனான சந்திப்புகள் போன்றவை குறித்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் புகைப்படக் கண்காட்சியை புகைப்பட நிபுணர் கோவை சுப்பு ஏற்பாடு செய்திருந்தார்.

கண்காட்சியைப் பார்வையிட்ட அமைச்சர் துரைமுருகன்அவர்கள், அங்கு வைக்கப் பட்டுள்ள பார்வையாளர் புத்தகத்தில், ‘அந்த நாள் ஞாபகம் வந்ததே நண்பனே’ என்ற வாசகத்தை எழுதினார்.

### நாகை மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி

# ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை!

## பி.என்.கார்த்தி, ப.உதயக்குமார், அ.பாரிபாலன் பங்கேற்பு!

நாகை, நவ. 28 -

நாகை மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில் நுட்ப அணிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ப.உதயக்குமார், தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி. கலையரசன் வரவேற்றார். கூட்டத்தில் நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கி இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில் நுட்ப அணிகளின் பணிகள் குறித்து பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எஸ். அசோக், ஜி.தாமோதரன், பன்னீர், டேனியல்சத்தியா, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் எலக்ட்டிகல் ஆர்.பாலா, செந்தாமரைசெல்வன், உதயா, தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் எஸ்.செல்வா, ரெக்ஸ், ராபர்ட்கிங் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :-

கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதோடு கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் பிறந்த நாளை நாகை மாவட்டம் முழுவதும், தாய் கழகத்தோடு இணைந்து கழக் கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும், ஏழை, எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், மருத்துவ முகாம் மற்றும் இரத்த தான முகாம் நடத்தியும் சிறப்பாக கொண்டாடுவது என்றும், நீட் விலக்கு, நம் இலக்கு என்று 50 நாள் 50 லட்சம் கையெழுத்துப் பெற்று அதைத் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கும் வகையில் நாகை மாவட்டத்திற்கு என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கைவிட கூடுதலாக பொதுமக்கள், மாணவ, மாணவிகள் என அனைத்துத் தரப்பு மக்களிடம் கையொப்பம் பெற்று அதை வரும் டிசம்பர் 17ம் தேதி சேலம் மாநாட்டில் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலினிடம் வழங்கிடுவது என்றும்,

வரும் டிசம்பர் 17ம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள 2 வது மாநில மாநாட்டிற்கு தொகுதிக்கு 2 ஆயிரம் பேர் என 6000 பேரை சேலம் மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

### சேலம் – பொட்டனேரி – முன்னாள் இராணுவ வீரர்

# மு.செந்தில்குமார் 30ஆம் ஆண்டு நினைவு நாள்!

## திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் அஞ்சலி!

சேலம், நவ. 28-

சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம், பொட்டனேரி கிராமம் குள்ளமுடையனூரைச் சேர்ந்த - முன்னாள் இராணுவ வீரர் மு.செந்தில் குமார் அவர்களின் 30 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று (28.11.2023)கடைப் பிடிக்கப்படுகிறது.

முத்துசாமி - பார்வதி அம்மாள் ஆகியோரின் மூத்த மகனாய் 28.5.1972ல் பிறந்து இராணுவ போர் வீரனாய் பணியில் சேர்ந்து, பணியின் போது 28.11.1993-ல் வீர மரணம் அடைந்த மு.செந்தில் குமார் அவர்களின் பெயர் சேலம் கலெக்டர் அலுவலகத்தில் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



மறைந்த முன்னாள் இராணுவ வீரர் மு.செந்தில்குமாரின் 30 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று (28.11.2023) அன்னாரது இல்லத்தில் கடைப் பிடிக்கப்படுகிறது.

கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவரான - அவருக்கு காவல்துறை உதவி ஆய்வாளர் மு.சிவராசு என்ற தம்பியும், மு. மலர்க்கொடி, மு.பாக்கிய லட்சுமி என்ற இரு தங்கைகளும் உள்ளனர். தங்கை மு.மலர்க்கொடி மேச்சேரி ஒன்றிய தி.மு.க. முன்னாள் துணைச் செயலாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரது நினைவு நாளில் பொட்டனேரி கிராமத்தினர், கழகத்தினர் கலந்துகொண்டு அன்னாரது திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முதல்வர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி கழக சட்டத்துறை சார்பில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான ஆறாவது மண்டல பேச்சுப்போட்டி கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தலைமையில் திருச்சி அரசு சட்டக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன், சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன், துணைச் செயலாளர் பச்சையப்பன், தலைமைக் கழக வழக்கறிஞர் கே. ஜே. சரவணன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர். இப்போட்டிக்கு நடுவர்களாக தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றிக்கொண்டான் மற்றும் நன்மாறன் ஆகியோர் கலந்துகொண்டனர். இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, திருச்சி மாநகராட்சி மேயர் அன்பழகன் ஆகியோர் இணைந்து வழங்கினர். கலந்துகொண்ட மாணவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

### கிருஷ்ணகிரியில் – நகரச் செயலாளர் எஸ்.கே.நவாப் – நகர்மன்றத் தலைவர் பரிதா நவாப்பால் நிறுவப்பட்ட

# முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலை: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

## கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் தலைமையில் விழா!

கிருஷ்ணகிரி, நவ. 28 -

கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருஉருவ வெண்கல சிலையினை கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் கிருஷ்ணகிரி நகர கழகச் செயலாளர் எஸ்.கே.நவாப். கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.பரிதா நவாப் ஆகியோரால் நிறுவப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ வெண்கல சிலை திறப்பு விழா கிருஷ்ணகிரி கலைஞர் மேம்பாலம் அருகே நடைபெற்றது. விழாவிற்கு கழக பொதுச் செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமை தாங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும் உணவு மற்றும் உணவு பொருட்கள் வழங்கல் துறை அமைச்சருமான அர. சக்கரபாணி வரவேற்புரை ஆற்றினார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், அவைத் தலைவர் நாகராஜ், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப், செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லம்ரஹ்மான் ஷெரீப் , பாலன் நாகராசன், கே.ஆர்.கோதண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலையை திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செய்து சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி மற்றும் நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை கே.ஆர்.பெரியகருப்பன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய். பிரகாஷ், மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்துப் பாதுகாப்பு உறுப்பினர் இ.ஜி சுகவனம், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் எம்.வி. வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.சி.கோவிந்தசாமி, கிருஷ்ண மூர்த்தி, நரசிம்மன், மாநில விவசாய அணி துணை செயலாளர்கள் டேம்.வெங்கடேசன், அரியப்பன், மாநில மகளிர் ஆணையர் குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி, பி.டி. அன்பரசன், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், மகேந்திரன் தேங்காய் சுப்பிரமணி, சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், அறிஞர், குண.வசந்தரசு, எக்கூர் செல்வம், ரஜினி செல்வம் குமரேசன், பேரூர் கழகச் செயலாளர்கள் பாபு, தம்பிதுரை, வெங்கடப்பன் பாபு சிவகுமார், அணிகளின் அமைப்பாளர்கள் தினேஷ் ராஜன், ஜெயேந்திரன், லட்சுமி பிரியா, புஷ்பா விஜய் ராஜசேகர், காந்தி, பாலாஜி, சுரேஷ்குமார், ஜெயக்குமார், சாஜித், இளைய ராஜா, மோகன், வேல்மணி அம்மன் ராஜா, சங்கர், தமிழ்ச்செல்வன், ஜீவானந்தம், வெங்கடேஷ் ராஜா, மாணிக்கம், சத்தி நாராயண மூர்த்தி,நேதாஜி, கிருஷ்ணன் மற்றும் அணிகளின் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், வட்டப் பிரதிநிதிகள், ஊராட்சி செய லாளர்கள், வார்டு செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். முன்னதாக குத்தூஸ் அவர்களின் இன்னிசைநிகழ்ச்சி நடைபெற்றது.

முடிவில் கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் எஸ். கே.நவாப் நன்றி உரையாற்றினார்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில்

# 113 நபர்களின் நகைக்கடன் தள்ளுபடி சான்றிதழ்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

புதுக்கோட்டை, நவ. 28 -

புதுக்கோட்டை மாவட்டம், MM.595 வம்பன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், கூட்டுறவுத்துறையின் சார்பில், வம்பன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், ஆலங்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் பூவரசக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் ஆகிய சங்கங்களைச் சேர்ந்த 113 நபர்களின் ரூ.26.14 இலட்சம் மதிப்பில் நகைக்கடன் தள்ளுபடி சான்றிதழ் மற்றும் நகைகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 25.11.2023 அன்று வழங்கினார்.

பின்னர் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்கள் வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் கூட்டுறவுத்துறையின் சார்பில் பொதுமக்களின் நலனிற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி 5 பவுன் வரையிலான நகைக்கடன்கள் தள்ளுபடி செய்து அதற்கான சான்றிதழ் மற்றும் நகைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களான, வம்பனில் 102 பயனாளிகளுக்கு ரூ.21.52 இலட்சமும், ஆலங்குடியில் 5 பயனாளிகளுக்கு ரூ.2.70 இலட்சமும், பூவரசக்குடியில் 6 பயனாளிகளுக்கு ரூ.1.92 இலட்சமும் என மொத்தம் ரூ.26.14 இலட்சம் மதிப்பீட்டிலும் நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, அதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் வகையில் 17 இலட்சம் விவசாய மின்இணைப்புகளை வழங்கியதன் மூலம் தமிழகம் உணவு தானிய உற்பத்தியில் இந்தியாவிலேயே முதல் இடம் பெற்று விளங்குகிறது. மேலும் முதலமைச்சர் அவர்களும் விவசாயத்திற்கென தனி நிதிநிலை அறிக்கையினை சட்டமன்றத்தில் தாக்கல் செய்து விவசாயிகளுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில் ஆட்சி பொறுப்பேற்றது முதல் தற்பொழுது வரை 2 இலட்சம் விவசாய மின்இணைப்புகளை வழங்கி உள்ளார்கள்.

மேலும் மகளிர் சுய உதவிக் குழுவினர் பெற்ற ரூ.2,700 கோடி மதிப்பிலான கடனுதவிகளை தள்ளுபடி செய்ததுடன், அவர்களுக்கு புதிதாக தொழில் தொடங்கிட கடனுதவிகளையும் வழங்கி வருகிறார்கள்.

இந்தியாவே திரும்பி பார்க்கும் வகையில் ரூ.7,000 கோடி மதிப்பிலான விவசாய கடன்களை தள்ளுபடி செய்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் முதலமைச்சர் அவர்களும் நடப்பு நிதியாண்டில் விவசாயிகளுக்கு கடனுதவி அளிக்கும் வகையில் ரூ.13,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்து கடனுதவிகள் தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையினை பூர்த்தி செய்யும் வகையில் ரூ.13 கோடி மதிப்பீட்டில் துணை மின் நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

இதன்மூலம் இப்பகுதி மக்கள் மற்றும் விவசாயிகளின் மின் தேவை பூர்த்தி செய்யப்படும். விவசாயிகளின் தோழனாக இருந்து, விவசாயிகளுக்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வரும் முதலமைச்சர் அவர்களின் திட்டங்களை முழுமையாக பயன்படுத்திக்கொண்டு விவசாயிகள் அனைவரும் தங்களது பொருளாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, அறந்தாங்கி சரக துணைப் பதிவாளர் ஆறுமுகப்பெருமாள், கூட்டுறவு சார்பதிவாளர் அன்னலட்சுமி, ஒன்றியக்குழு உறுப்பினர் கருப்பையா, வட்டார வளர்ச்சி அலுவலர் ஆயிஷா ராணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி நடுவீரப்பட்டு கிராமத்தில் நீட் விலக்கு நமது இலக்கு கையெழுத்து இயக்கம் மற்றும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திங்கள்கிழமை நடைபெற்றது. கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் தலைமை வகித்து நீட் விலக்கு பதாகையில் கையெழுத்து இட்டு தொடங்கி வைத்தார். தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி தி.மு.க. கொடியேற்றி இனிப்பு மற்றும் எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். கடலூர் ஒன்றியச் செயலாளர்கள் பி.சுப்பிரமணியன்(மேற்கு), டி.காசிராஜன்(கிழக்கு), அவைத்தலைவர் கே.எஸ்.சாரங்கபாணி, தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், சி.என்.பாளையம் வைத்திய லிங்கம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ.எம்.மதியழகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.